மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. சோனையா: இராமனுதபுரம் மாவட்டத்தில் இருக்கிற மானுமதுரையைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளாக கேட்டுக் கொண்டு வரப்படுகிற அந்தத் திட்டம் இப்போது நிறைவேறுகிற தருவாயில் இருக்கிறது. அந்தக் குடி நீர் திட்டத்தை இப்போது வறட்சி நிலை இருப்பதால் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்கான நிர்வாகச் செலவு, மற்றச் செலவுகள் எல்லாம் நகரமன்றம் ஏற்றுக் கொள்வது போன்ற பிரச்னைகள் எல்லாம் இப்போது குடி நீர் வாரியத்திற்கு வந்து மறுபடியும் சர்க்கார் ஆணைக்கு வந்த பிறகு அதைப்பற்றியெல்லாம் பரிசீலித்து எவ்வளவு விரைவில் நடவடிக்கை எடுக்கமுடியுமோ அந்த அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Semmarikulam Therikudieruppu road

*735 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to blacktop the Semmarikulam Therikudieruppu road (*via*) Solaikudieruppu and Kudiraimedu in Tiruchendur taluk; and

(*b*) if so, when the work will be started?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: இந்தச் சாலை மிகவும் முக்கியமான பல கிராமங்களை தொடர்புபடுத்தக்கூடிய சாலை. ஆகவே, இதை விரைவில் தார் போடுவதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது நாலரை லட்சம் ரூபாய்க்கு மேல் ஆகிற இனமாக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இதை எடுப்பதற்கான உத்தேசம் இல்லை. இதை பின்னுல்தான் பார்க்கவேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தச் சாலை என் தொகுதி திருச்செந்தூர் தொகுதியில் உள்ள சாலை, இந்த செம்மரிகுளம்—தேரி குடியிருப்பு சாலை, நன்கு காற்று அடிக்கும்போது அந்த ரோடு மண்ணல் மூடி விடுகிறது. ஆகவே அது மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்க அந்த ரோடின் உயரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்.

Houses for Revenue Officials in Salem

*736 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the State Housing Board to construct houses for the members of the Salem District Revenue Officials Association ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) குறைந்த வருமான தொகுதியினருக்காக 103 வீடுகளும் நடுத்தர வருமான தொகுதியினருக்காக 2 வீடுகளும் கட்டும் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருக்கிறது. மேற்படி வீடுகள் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, பல கட்டங்களில் இருக்கிறது.

தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடுகள்.

* 737 வின— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் வட்டம், செம்பனார்கோவில் ஒன்றியம், தாழம்பேட்டையில் மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திருப்பத்தூரில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவமனை

* 738 வின— திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—